(எட்டாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 6 (2).]

# பாராளுமன்றம்

## 6 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2017 மே 26 வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

---

## 2017 யூன் 06, செவ்வாய்க்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

கடற்றொழில் நீர்வாழ் உயிரின வளங்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*

குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*

சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர்,— தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2015 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகார சபைச் சட்டத்தின் 118 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 142 ஆவது பிரிவின் கீழ், மருத்துவ உபகரணங்கள் விலை குறித்தல் தொடர்பாக சுகாதார, போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2017 பெப்புருவரி 17 ஆம் திகதிய 2006/45 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2017.05.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*

நீதி அமைச்சரும் புத்தசாசன அமைச்சரும்,— நீதித்துறைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதி,— 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நீதித்துறைச் சட்டத்தின் 60 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும், சட்டத்தின் 61 ஆம் பிரிவின் கீழ், நீதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2017 மாச்சு 27 ஆம் திகதிய 2012/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2017.05.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதி அங்கீகரிக்கப்படுமாக.

*

அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ், செஸ் வரி தொடர்பில் அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2017 மாச்சு 21 ஆம் திகதிய 2011/9 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2017.05.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

# 2017 யூலை 04, செவ்வாய்க்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

921/ '16

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 2011 சனவரி முதல் 2015 சனவரி வரையிலான காலப்பகுதியில் வீடமைப்பு, நிர்மாணத்துறை அமைச்சில் இடம்பெற்றுள்ள ஊழல், மோசடி மற்றும் அரச சொத்துக்களை தவறாக பயன்படுத்துதல் சம்பந்தமாக அமைச்சு மட்டத்தில் விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி ஒவ்வொரு விசாரணையினதும் முன்னேற்றம் யாதென்பதையும்;

(iii) மேற்படி ஊழல் மற்றும் மோசடிகளுடன் அமைச்சின் உத்தியோகத்தர்கள் தொடர்புபட்டுள்ளார்களென இனங்காணப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், இவர்கள் சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட ஒழுக்காற்று நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1045/16

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2012 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க உள்ளூராட்சி தேர்தல்கள் சட்டத்தின் படி, உள்ளூராட்சித் தொகுதி எல்லைகள் தொடர்பான மேன்முறையீடுகளை ஆராய்வதற்காக மேன்முறையீட்டுக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், இக்குழுவினால் 2016 ஒக்டோபர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு மேன்முறையீடுகளை ஆராய்ந்து முடிவுறுத்தப்பட்டுள்ள உள்ளூராட்சி நிறுவனங்களின் எண்ணிக்கை எவ்வளவு;

(iii) மேலே (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள உள்ளூராட்சி நிறுவனங்களின் பெயர்கள் யாவை;

(iv) மேற்படி உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு இதுவரை தேர்தல் நடத்தப்படாதிருப்பது ஏன்;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1162/ '16

கௌரவ பிமல் ரத்நாயக்க,— வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஹக்வட்டுனாவ மற்றும் கஹல்ல ஒதுக்கங்களின் உத்தேச யானைக்கடவைத் திட்டமானது வனசீவராசிகள் முகாமைத்துவக் குழுவொன்று மூலமாக தயாரிக்கப்பட்டிருப்பின் அதன் அங்கத்தவர்களின் பெயர்கள், முகவரிகள் மற்றும் தொழில்வாண்மைத் தகைமைகள் யாவை;

(ii) அது சம்பந்தமாக வெளிக்கள ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருப்பின் அது எப்போது; சம்பந்தப்பட்ட வனசீவராசிகள் முகாமைத்துவக் குழு சந்தித்த சமய மற்றும் சமுதாய அமைப்புக்கள் யாவை;

(iii) இது சம்பந்தமாக சுற்றாடல் ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருப்பின் அதில் பங்கேற்ற சுற்றாடல் அமைப்புகள்/ சுற்றாடலியலாளர்கள் யாவர்;

(iv) அவ்வறிக்கையை சமர்ப்பிப்பாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இத்தகைய திட்டமொன்று தயாரிக்கப்படவேண்டிய விஞ்ஞானரீதியான முறையியல் யாது; உத்தேச திட்டம் அந்த முறையியலுக்கு அமைவாகவா தயாரிக்கப்பட்டுள்ளது;

(ii) உத்தேச யானைக்கடவைத் திட்டத்தை கஜ-மித்துறு அமைப்பு அங்கீகரித்திருப்பின் அது எக்காலத்தில் எவரால்;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி திட்டம் மாவட்ட இணைப்புக் குழுவினால் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ள வேளையில் அதனைப் பொருட்படுத்தாமல் பிரதேச செயலாளர் அது சம்பந்தமாக இடையீடு செய்கிறார் என்பதையும்;

(ii) மாவட்ட இணைப்புக் குழுவினை மீறிச்செல்ல பிரதேச செயலாளருக்கு அதிகாரம் கையளிக்கப்பட்டிருப்பின் அது எவரால்;

என்பதை மேலும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1181/ '16

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) வவுனியா மாவட்டத்தில்,

(i) 1983 ஆம் ஆண்டளவில் செய்கைபண்ணப்பட்ட மொத்த விவசாய நிலங்களின் அளவு யாது;

(ii) 1982 மற்றும் 1983 ஆம் ஆண்டுகளில் செய்கைபண்ணப்பட்ட விவசாய நிலங்களின் அளவு ஒவ்வொரு பயிருக்கிணங்கவும் வெவ்வேறாக எவ்வளவு;

(iii) 1983 ஆம் ஆண்டின் பின்னர் 2009 ஆம் ஆண்டில் யுத்தநிலைமை முற்றுப்பெறும்வரை செய்கைபண்ணப்பட்ட மொத்த நிலங்களின் அளவு ஒவ்வோராண்டுக்கிணங்கவும் வெவ்வேறாக எவ்வளவு;

(iv) யுத்தநிலைமை முற்றுப்பெற்ற பின்னர் இற்றைவரை செய்கைபண்ணப்பட்ட விவசாய நிலங்களின் அளவு ஒவ்வோராண்டுக்கிணங்கவும் வெவ்வேறாக எவ்வளவு;

(v) மேற்படி அனைத்தினதும் முழுமையான அறிக்கையொன்றை சமர்ப்பிப்பாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1297/ '16

கௌரவ டலஸ் அழஹப்பெரும,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மாத்தறை மாவட்டத்தின் தேசிய மற்றும் மாகாணப் பாடசாலைகளில் பணியாற்றும் இலங்கை அதிபர் சேவையில் தரநிலைப்படுத்தப்பட்ட அதிபர்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி எண்ணிக்கை ஒவ்வொரு தரத்துக்கும் அமைவாக வெவ்வேறாக யாது;

(iii) மாத்தறை மாவட்டத்தின் தேசிய அல்லது மாகாண பாடசாலைகளில் இலங்கை அதிபர் சேவையில் தரநிலைப்படுத்தப்படாத ஆட்கள் அதிபர் பதவிகளை வகிக்கின்றார்களா;

(iv) ஆமெனில், அப்பாடசாலைகள் யாவை;

(v) அதிபர் தரத்தைப் பெற்றுள்ளபோதிலும், அதிபர் பதவியைப் பெறாது மாத்தறை மாவட்டத்தின் தேசிய மற்றும் மாகாண பாடசாலைகளில் பணியாற்றும் ஆட்களின் எண்ணிக்கை யாது;

(vi) மேலே (v) இன் பொருட்டு இனங்காணப்பட்டுள்ள காரணங்கள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1311/ '16

கௌரவ எம். எச். எம். சல்மான்,— உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாறை மாவட்டத்தின் கல்முனை பிரதேச செயலாளர் பிரிவு தாபிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) அது தொடர்பில் வெளியிடப்பட்ட வர்த்தனமானப் பத்திரிகையின் பிரதி ஒன்றை சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iii) கல்முனை பிரதேச செயலாளர் பிரிவில் உள்ளடங்குகின்ற மொத்த நிலப்பரப்பு யாதென்பதையும்;

(iv) அதிலுள்ள கிராம அலுவலர் பிரிவுகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(v) மேற்படி கிராம அலுவலர் பிரிவுகளின் உத்தியோகபூர்வ இலக்கங்கள் மற்றும் பெயர்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) கல்முனை பிரதேச செயலாளர் பிரிவு தாபிக்கப்படுகின்றபோது உத்தியோகபூர்வமாக எல்லை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அது தொடர்பான விபரங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) கல்முனை பிரதேச செயலாளர் பிரிவுக்குரிய கிராம அலுவலர் பிரிவுகளில் எதேனும் பிரிவின்/பிரிவுகளின் நிருவாக நடவடிக்கைகள் அல்லது தொழிற்படுத்தல்கள் வேறொரு பிரதேச செயலகத்தினால் மேற்கொள்ளப் படுகின்றனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்தகைய கிராம அலுவலர் பிரிவுகளின் பெயர்கள், உத்தியோகபூர்வ இலக்கங்கள் உட்பட்ட விபரங்களைச் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iii) கல்முனை தமிழ் பிரதேச செயலாளர் பிரிவொன்று அல்லது உப செயலாளர் பிரிவொன்று தாபிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், அதற்குரிய வர்த்தமானப் பத்திரிகையை சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1322/ '16

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கடந்த அரசாங்க காலத்தில் பிரதேச செயலகங்கள் ஊடாக செயற்படுத்தப்பட்ட சிறிய அளவிலான அபிவிருத்தித்திட்ட ஒப்பந்தங்கள், மதிப்பீட்டுத் தொகைக்கு, ஏற்புடைய பிரதேச செயலக ஆளுகைப் பிரதேசத்தில் இயங்கும் சங்கங்களுக்கு அளிக்கப்பட்டுள்ளதை ஏற்றுக்கொள்கின்றாரா என்பதையும்;

(ii) இருந்த போதிலும், தற்போது மேலே குறிப்பிட்ட அபிவிருத்தித் திட்டங்களுக்கு கேள்விப்பத்திரம் கோரப்பட்டு ஆகக்குறைந்த கேள்விப்பத்திரத்துக்கு மேற்படி ஒப்பந்தங்கள் வழங்கப்படுவதை அறிவாரா என்பதையும்;

(iii) இவ்வாறு கேள்விப்பத்திரங்கள் கோரப்பட்டு ஆகக்குறைந்த கேள்விப் பத்திரத்துக்கு மேற்படி அபிவிருத்தி திட்ட ஒப்பந்தங்கள் வழங்கப்படுவதால் பிரதேசத்தில் இயங்கிய சங்கங்களுக்கு மேற்படி ஒப்பந்தங்களை பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் அத்தகைய சங்கங்களும் அப் பிரதேசமும் நலன்களை இழந்துள்ளனவென்பதை ஏற்றுக்கொள்கின்றாரா என்பதையும்;

(iv) மேலே குறிப்பிட்ட சங்கங்களுக்கு நேர்ந்துள்ள அநீதியிலிருந்து இவர்களை மீட்டெடுப்பதற்காக, முன்னர் காணப்பட்டதை போன்று திறந்த கேள்விப்பத்திரங்கள் கோரலின்றி சிறிய அளவிலான ஒப்பந்தங்களை மதிப்பீட்டுத் தொகைக்கு மேற்படி சங்கங்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்,

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1330/ '16

கௌரவ புத்திக பத்திரண,— மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வரையறுக்கப்பட்ட லங்கா ரான்ஸ்போமர் (LTL) கம்பனியின் உப கம்பனியான LTL புரோஜெக்ட்ஸ் கம்பனி தாபிக்கப்பட்ட திகதி யாது;

(ii) LTL கம்பனிக்கு இதன் 100% உரிமை உள்ளதா;

(iii) இதன் தற்போதைய உரிமையாளர்கள் யாவர்;

(iv) தற்போது LTL கம்பனிக்கு LTL புரொஜெக்ட்ஸ் கம்பனியின் பங்குகள் உரித்துடையதாகக் காணப்படுகின்றதா;

(v) LTL கம்பனிக்கு உரித்தான LTL புரொஜெக்ட்ஸ் கம்பனியின் பங்குகளை பராதீனப்படுத்துவதற்கு அல்லது உரிமை மாற்றம் செய்வதற்கான உரிமையை வழங்கியவர்கள் யார்;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) LTL கம்பனிக்கு உரித்தான LTL புரொஜெக்ட்ஸ் (தனியார்) வரையறுக்கப்பட்ட உப கம்பனியானது 2006 ஆம் ஆண்டுக்குப் பின்னர் கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடங்கவில்லை என்பதையும், இதன் காரணமாக இக்கம்பனியின் இலாபப் பங்குகள் அரசாங்கத்துக்கு கிடைக்கப்பெறுவதில்லை என்பதையும் அவர் அறிவாரா;

(ii) இது தொடர்பில் விசாரணை நடத்தி, 2006ஆம் ஆண்டு முதல் இதுவரை அரசாங்கம் இழந்த இலாபப் பங்குப் பணத்தொகையை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1344/ '16

கௌரவ செயிட் அலி ஸாஹிர் மௌலானா,— மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) தெரிவான உள்ளூரதிகார சபைகள் கலைக்கப்பட்டதிலிருந்து நிதி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் எண்ணிக்கைக்கு புறம்பாக 2015.05.15 ஆந் திகதி ஏறாவூர் நகர சபைக்கும் காத்தான்குடி நகர சபைக்கும் கோரளைப்பற்று மேற்கு பிரதேச சபைக்கும் நியமிக்கப்பட்ட மேலதிகமான தற்காலிக ஊழியர்களின் எண்ணிக்கையை வெவ்வேறாகவும்;

(ii) கிழக்கு மாகாணத்தின் தற்போதைய முதலமைச்சரின் விதப்புரைக்கிணங்க வழங்கப்பட்ட அத்தகைய நியமனங்களின் எண்ணிக்கையையும்;

(iii) அத்தகைய நியமனங்களுக்கு ஊதியமளிக்க உள்ளூரதிகார சபைகள் ஒவ்வொன்றுக்கும் போதிய நிதி உள்ளதா என்பதையும்;

(iv) அத்தகைய தற்காலிக ஊழியர்களின் சேவையின் தன்மையையும்;

அவர் இச்சபைக்கு தெரிவிப்பாரா?

(ஆ) (i) அத்தகைய நியமனங்கள் ஒவ்வொரு உள்ளூரதிகார சபையின் தேவைகளுக்கிணங்க இருக்கின்றனவா என்பதையும்;

(ii) அது அதிக பணியாட்டொகுதியையும் நிதியியல் வரையறைகளையும் ஏற்படுத்தியுள்ளதா என்பதையும் அவ்வாறெனில் ஏன் என்பதையும்;

(iii) ஏதேனும் அத்தகைய தற்காலிக ஊழியர்களுக்கு தற்போது குறைந்த ஊதியம் வழங்கப்படுகிறதா அல்லது ஊதியம் வழங்கப்படாமல் இருக்கிறதா என்பதையும் அவ்வாறெனில் ஏன் என்பதையும்;

(iv) இந்த தற்காலிக ஊழியர்களை உள்வாங்க பதவியணியின் எண்ணிக்கையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் மேலும் இச்சபைக்கு தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1370/ '16

கௌரவ பந்துல குணவர்தன,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2016 வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளின்படி, சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சித் துறையை ஒழுங்குமுறையாக்குவதற்கு தேவையான "ஒழுங்குமுறையாக்கல் அதிகாரசபை" ஒன்று தாபிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அத்திகதி யாதென்பதையும்;

(iii) இலங்கையில் நுண் நிதி நிறுவனங்களை பதிவு செய்யும்போது ரூபா 25,000/- கட்டணமொன்றைச் செலுத்த வேண்டுமா என்பதையும்;

(iv) சிறிய மற்றும் நடுத்தர அளவிலான துறை எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளை ஆய்வு செய்வதற்கு ஆலோசனைக் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், அக்குழுவின் உறுப்பினர்கள் யாவர் என்பதையும்;

(vi) சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கடன் பாதுகாப்பு வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்காக 2016 ஆம் ஆண்டில், அரசாங்கம் ரூபா 500 மில்லியன் தொகை ஆரம்ப நிதியத்தை வழங்கியதா என்பதையும்;

(vii) சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சித் துறைக்கு சலுகை வட்டிவீதத்தின் கீழ் நிதி வசதிகளை வழங்குவதற்கான உதவியாக ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து ரூபா 100 மில்லியன் கடன் வசதி கிடைத்துள்ளதா என்பதையும்;

(viii) ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடன் வசதியின் கீழ், கடன் வழங்கப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் அடங்கிய பட்டியலைச் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1472/ '16

கௌரவ சமிந்த விஜேசிறி,— சமூக வலுவூட்டல், நலன்புரி மற்றும் கண்டி மரபுரிமைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) ஊவா மாகாணத்தின், பதுளை மாவட்டத்தில்,

(i) சமுர்த்தி நிவாரணம் பெறும் குடும்பங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் குடும்பங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழ்ந்து வருகின்ற மற்றும் சமுர்த்தி நிவாரணத்தை பெற்றுக்கொள்வதற்கான தகுதியை பூர்த்தி செய்துள்ள போதிலும், நிவாரணம் கிடைக்கப்பெறாத மக்களுக்கு சமுர்த்தி நிவாரணத்தை பெற்றுக்கொடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வாரா என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1014/ '16

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) கமத்தொழில் அமைச்சுக்கு வாடகை அடிப்படையில் புதிதாக கட்டிடமொன்று பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி திகதி யாது என்பதையும்;

(iii) அதற்காக கேள்விப்பத்திரங்கள் கோரப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், கேள்விப்பத்திரம் சமர்ப்பிக்க முன்வந்த ஆட்கள் மற்றும் அவர்கள் சமர்ப்பித்த விலை மனுக்கள் தனித்தனியே யாவை என்பதையும்;

(v) வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்ட கட்டிடத்திற்கான அரசாங்க விலைமதிப்பு, உரிமையாளரின் பெயர் மற்றும் முகவரி, மாதாந்த வாடகை மற்றும் செலுத்தப்பட்ட முற்பணத் தொகை யாது என்பதையும்;

(vi) மேற்படி கட்டிடத்திற்காக உரிமையாளருடன் கையொப்பமிடப்பட்ட குத்தகை உடன்படிக்கையை சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(vii) கமத்தொழில் அமைச்சு மேற்படி கட்டிடத்திற்கு கொண்டு செல்லப்பட்ட திகதி யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1047/ '16

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2015.01.10 முதல் 2016.10.31 ஆம் திகதி வரையிலான காலகட்டத்தினுள் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் மேற்கொண்டுள்ள வெளிநாட்டு விஜயங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) ஒவ்வொரு விஜயத்தின் நோக்கம், விஜயம் மேற்கொண்ட நாடுகள் மற்றும் ஒவ்வொரு விஜயத்திற்கும் செலவாகிய பணத்தொகை தனித்தனியாக யாதென்பதையும்;

(iii) மேற்படி விஜயங்களின் பெறுபேறாக இலங்கையின் நற்பெயருக்கு சாதகமான பலன் கிடைத்துள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல் ஏன்?

1181/ '16

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) அம்பாறை மாவட்டத்தில்,

(i) 1983 ஆம் ஆண்டளவில் செய்கைபண்ணப்பட்ட மொத்த விவசாய நிலங்களின் அளவு யாது;

(ii) 1982 மற்றும் 1983 ஆம் ஆண்டுகளில் செய்கைபண்ணப்பட்ட விவசாய நிலங்களின் அளவு ஒவ்வொரு பயிருக்கிணங்கவும் வெவ்வேறாக எவ்வளவு;

(iii) 1983 ஆம் ஆண்டின் பின்னர் 2009 ஆம் ஆண்டில் யுத்தநிலைமை முற்றுப்பெறும்வரை செய்கைபண்ணப்பட்ட மொத்த நிலங்களின் அளவு ஒவ்வோராண்டுக்கிணங்கவும் வெவ்வேறாக எவ்வளவு;

(iv) யுத்தநிலைமை முற்றுப்பெற்ற பின்னர் இற்றைவரை செய்கைபண்ணப்பட்ட விவசாய நிலங்களின் அளவு ஒவ்வோராண்டுக்கிணங்கவும் வெவ்வேறாக எவ்வளவு;

(v) மேற்படி அனைத்தினதும் முழுமையான அறிக்கையொன்றை சமர்ப்பிப்பாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1331/ '16

கௌரவ புத்திக பத்திரண,— மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) LTL Holdings (Pvt.) Ltd கம்பனிக்குச் சொந்தமான உபகம்பனிகளின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பெயர்கள் யாவை;

(ii) மேற்படி உபகம்பனிகள் தாபிக்கப்படும் முறையியல் யாது;

(iii) மேற்படி ஒவ்வொரு கம்பனியினாலும் மேற்கொள்ளப்படும் பணிகள் வெவ்வேறாக யாவை;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) குறிப்பிட்ட கம்பனிகளின் வருமானத்திலிருந்து இலங்கை மின்சார சபைக்கு கிடைக்கும் இலாபப் பங்கின் சதவீதம், ஒவ்வொரு கம்பனியின் அடிப்படையில் வெவ்வேறாக யாது;

(ii) இந்த இலாபப் பங்கு சரியானது அல்ல என்பதை ஏற்றுக்கொள்வாரா;

(iii) ஆமெனில், அதனைத் திருத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# 2017 யூலை 05, புதன்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

1066/ '16

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கை புகையிரத திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்ட 2015 - 2020 செயற்பாட்டுத் திட்டத்தில் புகையிரத இயந்திரங்களை கொள்வனவு செய்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படாமைக்கான காரணம் யாதென்பதையும்;

(ii) மேற்படி திட்டம் செயற்படுத்தப்படாதெனில், மாற்றுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) சர்வதேச போட்டி ரீதியிலான விலைமனுக் கோரலின்றி இந்தியாவிலிருந்து புகையிரத இயந்திரங்களை கொள்வனவு செய்வதற்கான திட்டமொன்று உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iii) இந்தியாவில் புகையிரத இயந்திரங்களை உற்பத்தி செய்கின்ற கம்பனிகளின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iv) சர்வதேச போட்டி ரீதியிலான விலைமனுக் கோரல் மேற்கொள்ளப்படாமை நல்லாட்சி கோட்பாட்டுக்கு அமைவானதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1137/ '16

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— பிரதம அமைச்சரும், தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நாடு முழுவதிலும் இயங்கிவருகின்ற மாவட்ட மற்றும் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) அவற்றின் தவிசாளர் அல்லது இணைத்தவிசாளர் பதவிகளை வகிக்கின்ற ஆட்களின் பெயர்கள் மற்றும் பதவிகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஆட்களில் பாராளுமன்ற அல்லது மாகாண சபை உறுப்பினர்கள் அல்லாத ஆட்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1185/ '16

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கிளிநொச்சி மாவட்டத்தில்,

(i) 1983 ஆம் ஆண்டளவில் செய்கைபண்ணப்பட்ட மொத்த விவசாய நிலங்களின் அளவு யாது;

(ii) 1982 மற்றும் 1983 ஆம் ஆண்டுகளில் செய்கைபண்ணப்பட்ட விவசாய நிலங்களின் அளவு ஒவ்வொரு பயிருக்கிணங்கவும் வெவ்வேறாக எவ்வளவு;

(iii) 1983 ஆம் ஆண்டின் பின்னர் 2009 ஆம் ஆண்டில் யுத்தநிலைமை முற்றுப்பெறும்வரை செய்கைபண்ணப்பட்ட மொத்த நிலங்களின் அளவு ஒவ்வோராண்டுக்கிணங்கவும் வெவ்வேறாக எவ்வளவு;

(iv) யுத்தநிலைமை முற்றுப்பெற்ற பின்னர் இற்றைவரை செய்கைபண்ணப்பட்ட விவசாய நிலங்களின் அளவு ஒவ்வோராண்டுக்கிணங்கவும் வெவ்வேறாக எவ்வளவு;

(v) மேற்படி அனைத்தினதும் முழுமையான அறிக்கையொன்றை சமர்ப்பிப்பாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1299/ '16

கௌரவ டலஸ் அழஹப்பெரும,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) மாத்தறை மாவட்டத்தில் அமைந்துள்ள தேசிய மற்றும் மாகாண,

(i) பாடசாலைகளின் எண்ணிக்கை தனித்தனியாக எத்தனையென்பதையும்;

(ii) பாடசாலைகளில் பணியாற்றும் ஆசிரியர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு பாடசாலையின் பிரகாரம் எத்தனையென்பதையும்;

(iii) பாடசாலைகளில் பணியாற்றும் ஆசிரியர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு பாடத்தின் பிரகாரம் எத்தனையென்பதையும்;

(iv) பாடசாலைகளில் பணியாற்றும் ஆசிரியர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு வலயத்திற்கேற்ப எத்தனையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மாத்தறை மாவட்டத்தின் தேசிய மற்றும் மாகாண பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அந்த எண்ணிக்கையானது தேசிய மற்றும் மாகாண பாடசாலைகளின் பிரகாரம் தனித்தனியாக எத்தனையென்பதையும்;

(iii) மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கிடையிலான விகிதம் ஒவ்வொரு பாடத்தின் பிரகாரம் தனித்தனியாக எத்தனையென்பதையும்;

(iv) மேற்படி (iii) இல் குறிப்பிடப்பட்டுள்ள விகிதமானது கல்வி வலயத்திற்கேற்ப தனித்தனியாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1332/ '16

கௌரவ புத்திக பத்திரண,— மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை மின்சார சபையின் கீழ் லங்கா ரான்ஸ்போமர் எனும் பெயரில் நிறுவனமொன்று காணப்பட்டதா;

(ii) மேற்படி நிறுவனத்தின் பெயர் மாற்றப்பட்டுள்ளதா;

(iii) ஆமெனில், இதன் தற்போதைய பெயர் யாது;

(iv) வ/ப எல்ரீஎல் ஹோல்டிங்ஸ் ( தனியார்) கம்பனிக்குச் சொந்தமான பங்குகள் பகிரப்பட்டுள்ள விதம் யாது;

(v) ESOT (நம்பிக்கைகப் பொறுப்பு) பங்குதாரர்களிடம் காணப்படும் பங்குகளை நிருவகிப்பது யார்;

(vi) இதன் பங்குதாரர்களின் பெயர்கள் மற்றும் அவர்களிடம் காணப்படும் பங்குகளின் எண்ணிக்கை பற்றிய பட்டியலொன்றை சமர்ப்பிப்பாரா;

(vii) ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு ஒப்பந்தத்தின் பிரகாரம், இது தாபிக்கப்பட்டு எவ்வளவு காலப்பகுதியில் அவர்களது பங்குகள் குறித்தும் அவர்கள் பங்குதாரர்கள் என்பது பற்றியும் அறிவிக்கப்பட்டுள்ளது;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) ESOT கம்பனியின் ஆரம்ப பங்குதாரர்கள் யார், அவர்களுக்கு உரித்தானதாயிருந்த பங்குகளின் அளவு யாது;

(ii) மேற்படி பங்குதாரர்களில் இலங்கை மின்சார சபையின் ஊழியர்கள் காணப்படுகின்றார்களா;

(iii) ஆமெனில், அவர்களுக்கு பிணைப்பு பற்றிய முரண்பாடு இருப்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) COPE அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் வ/ப எல்ரீஎல் ஹோல்டிங்ஸ் (தனியார்) கம்பனியினால் ரூபா 232 மில்லியன் இலாபப்பங்கு இலங்கை மின்சார சபைக்கு வழங்கப்படவில்லை என்பதை அறிவாரா;

(ii) இது தொடர்பில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1373/ '16

கௌரவ பந்துல குணவர்தன,— கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 2016 வரவு செலவு திட்டத்தின் 126 வது இலக்க முன்மொழிவின் பிரகாரம், சிறிய மட்டும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்களின் சந்தைப்படுத்தல் மேம்பாட்டுக்காக தனியார் துறையினரின் சிறப்புச் சந்தைகளில் அலுமாரித் தட்டுகளில் இடவசதிகள் நியாயமான விலைக்கு பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) தனியார் துறையினரின் சிறப்புச் சந்தைகளில் மேற்படி அலுமாரித் தட்டுகளில் இடவசதிகளை ஒதுக்கித் தரும்படி ஏதேனும் அமைச்சினால் கோரப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) அத்தகைய கோரிக்கையோ அல்லது கட்டளையோ விடுக்கப்பட்டிருப்பின், அதன் பிரதியொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iv) இலங்கையில் அமைந்துள்ள வரி அறவிடப்படுகின்ற தனியார்துறை சிறப்புச் சந்தைகளின் எண்ணிக்கையையும் அவை அமைந்துள்ள நகரங்களின்/ கிராமங்களின் பட்டியலொன்றையும் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1473/ '16

கௌரவ சமிந்த விஜேசிறி,— நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) தற்போது நாட்டில் நடைமுறையிலிருக்கும் நாட்டின் அபிவிருத்திக்கு விசேட பங்களிப்பு வழங்கும் பிரதேச ஊடகவியலாளர் அமைப்புக்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அந்த ஒவ்வொரு பிரதேச ஊடகவியலாளர் அமைப்பினதும் அவற்றில் பதவி வகிப்போரினதும் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) இவர்களது வாழ்க்கைத் மட்டத்தை உயர்வதற்கும் அதேபோன்று தொழில் வாழ்க்கையின் மேம்பாட்டுக்காகவும் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1499/ '16

கௌரவ எம்.எச்.எம். சல்மான்,— நீதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்து சட்டத்தின் 23 ஆம் பிரிவுக்கமைய 12 வயதுக்கு குறைந்த முஸ்லிம் சிறுமிகளை திருமணம் முடித்துக் கொடுக்கும் போது காதி நீதிபதிகளின் அங்கீகாரம் பெறப்பட வேண்டுமென்பதை அறிவாரா என்பதையும்;

(ii) அதன் பிரகாரம், 12 வயதுக்கு குறைந்த முஸ்லிம் சிறுமிகளை திருமணம் முடித்துக் கொடுக்கும்போது, காதி நீதிபதிகளினால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளமை தொடர்பாக அறிக்கையிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், 2010 ஆம் ஆண்டிலிருந்து இற்றை வரை மேற்படி சட்டத்தின் பிரகாரம் அங்கீகாரமளிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை மற்றும் அது தொடர்பான விபரங்கள் ஒவ்வொரு மாவட்டத்துக்கமைய வெவ்வேறாக யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# 2017 யூலை 06, வியாழக்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

1068/ '16

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கை புகையிரத திணைக்களத்தில் பணியாற்றும் ஏவலாளர்கள் ஒன்றிணைந்த சேவையை சேர்ந்தவர்களாவர் என்பதையும்;

(ii) ஏவலாளர்களை நேரடியாக ஆட்சேர்ப்பு செய்வதற்கு இலங்கை புகையிரத திணைக்களத்திற்கு அதிகாரம் இல்லையென்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) 2016 ஆம் ஆண்டில் இலங்கை புகையிரத திணைக்களத்திற்கு ஏவலாளர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு ஒன்றிணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் அனுமதி பெறப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அவ்வனுமதி கிடைத்த திகதி யாதென்பதையும்;

(iii) மேற்படி அனுமதி வழங்கப்பட்ட கடிதத்தின் பிரதியொன்றை சபைக்கு சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) ஏவலாளர்களை ஆட்சேர்ப்பு செய்யும் நேர்முகப் பரீட்சை மேலதிக புகையிரத பொதுமுகாமையாளரின் (நிருவாகம்) தலைமையில் நடாத்தப்பட்டதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்ட சந்தர்ப்பத்தில் இந்த உத்தியோகத்தர் சேவை இடைநிறுத்தத்திற்கு உள்ளாகியிருந்தார் என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iii) சேவை இடைநிறுத்தத்திற்கு உள்ளாகியுள்ள உத்தியோகத்தரொருவர் சேவையில் ஈடுபடுவது எவ்வாறு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1153/ '16

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஹோமாகம மற்றும் பண்டாரகம ஆகிய இரண்டு பிரதேச சபை ஆளுகைப் பிரதேசங்களுக்கும் சொந்தமான 98 ஏக்கர் பரப்பளவு கொண்ட பதுவில வத்த காணியில் சுற்றுலாத்துறை வீடமைப்புக் கருத்திட்டமொன்றை செயற்படுத்த அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், இக்கருத்திட்டத்தை செயற்படுத்தும் கம்பனியின் பெயர் மற்றும் முகவரி யாது;

(iii) இவ்வீடமைப்புக் கருத்திட்டம் காரணமாக இப்பிரதேசத்தில் பலத்த சுற்றாடல் பாதிப்பு ஏற்படுகின்றதென்பதை அறிவாரா;

(iv) இவ்வீடமைப்புக் கருத்திட்டத்துக்கு இலங்கை முதலீட்டு சபையின் அங்கீகாரம் கிடைத்துள்ளதா;

(v) இக்கருத்திட்டத்துக்கு சுற்றாடல் ஆய்வறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1186/ '16

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) புத்தளம் மாவட்டத்தில்,

(i) 1983 ஆம் ஆண்டளவில் செய்கைபண்ணப்பட்ட மொத்த விவசாய நிலங்களின் அளவு யாது;

(ii) 1982 மற்றும் 1983 ஆம் ஆண்டுகளில் செய்கைபண்ணப்பட்ட விவசாய நிலங்களின் அளவு ஒவ்வொரு பயிருக்கிணங்கவும் வெவ்வேறாக எவ்வளவு;

(iii) 1983 ஆம் ஆண்டின் பின்னர் 2009 ஆம் ஆண்டில் யுத்தநிலைமை முற்றுப்பெறும்வரை செய்கைபண்ணப்பட்ட மொத்த நிலங்களின் அளவு ஒவ்வோராண்டுக்கிணங்கவும் வெவ்வேறாக எவ்வளவு;

(iv) யுத்தநிலைமை முற்றுப்பெற்ற பின்னர் இற்றைவரை செய்கைபண்ணப்பட்ட விவசாய நிலங்களின் அளவு ஒவ்வோராண்டுக்கிணங்கவும் வெவ்வேறாக எவ்வளவு;

(v) மேற்படி அனைத்தினதும் முழுமையான அறிக்கையொன்றை சமர்ப்பிப்பாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1286/ '16

கௌரவ டலஸ் அழஹப்பெரும,— போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) அரச போக்குவரத்தின் பிரதானதொரு ஆக்கக்கூறாக விளங்கும் இபோச பேருந்து சேவையை, தனியார் துறை பேருந்து சேவைக்கு போட்டியானதொரு சேவையாக பேணிவருவதன் முக்கியத்துவத்தை ஏற்றுக்கொள்கிறாரா?

(ஆ) (i) 2014.12.31 ஆம் திகதி உள்ளவாறு மாத்தறை மாவட்டத்தின் இபோச பஸ் டிப்போக்களுக்கு சொந்தமான பேருந்துகளின் எண்ணிக்கை;

(ii) 2016.06.01 ஆம் திகதி உள்ளவாறு ஒவ்வொரு தொழிலின் அடிப்படையில் மேற்படி ஒவ்வொரு டிப்போவிலும் உள்ள பணியாளர்களின் எண்ணிக்கை;

(iii) 2015.01.01 ஆம் திகதிக்கு பின்னர் மாத்தறை மாவட்டத்தின் இபோச பஸ் டிப்போக்களுக்கு வழங்கப்பட்டுள்ள பேருந்துகளின் எண்ணிக்கை;

ஒவ்வொரு டிப்போவிற்கு அமைவாக தனித்தனியாக யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) 2014, 2015 மற்றும் 2016 ஆகிய ஆண்டுகளில் மாத்தறை மாவட்டத்தின்,

(i) இபோச பஸ் டிப்போக்களின் வருடாந்த புரள்வு;

(ii) இ.போ.ச.வினால் சேவை வழங்கப்படுகின்ற வீதிகளின் கிலோமீற்றர் அளவு;

ஒவ்வொரு வருடத்திற்குமேற்ப தனித்தனியாக எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) (i) பயணிகளின் தேவைக்கேற்ப மாத்தறை மாவட்டத்தினுள் மேலும் எத்தனை பஸ் டிப்போக்களை அமைப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றதென்பதையும்;

(ii) அதற்காக இனங்காணப்பட்டுள்ள பிரதேசங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

1334/ '16

கௌரவ புத்திக பத்திரண,— மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வகைப்படுத்தாத குப்பைகளை சேகரிக்காதிருப்பதற்கு உள்ளூராட்சி நிறுவனங்கள் எடுத்துள்ள முடிவை பற்றி மக்களை விழிப்புணர்வூட்டத் தேவையான நடவடிக்கைகள்

மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்,

(ii) ஆமெனில், அது எவ்வாறென்பதையும்,

(iii) குப்பைகளை வகைப்படுத்தி சேகரிக்கத் தேவையான வசதிகள் மக்களுக்குப் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளனவா என்பதையும்,

(iv) ஆமெனில், அது எவ்வாறென்பதையும்,

(v) வகைப்படுத்தப்பட்ட குப்பைகளை சேகரிப்பதற்கு உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு வசதிகள் செய்துகொடுக்கப்பட்டுள்ளனவா என்பதையும்,

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) குப்பைகளை வகைப்படுத்தித் தராத ஆட்களுக்கெதிராக எடுக்கபடும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) வகைப்படுத்தப்பட்ட குப்பைகள் மீள்சுழற்சி செய்யப்படுகின்றனவா என்பதையும்;

(iii) ஆமெனில், அது எந்த இடத்தில் என்பதையும்;

(iv) அதற்காக முதலீடு செய்யப்படும் பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(v) மீள்சுழற்சி செய்யப்பட்ட குப்பைகளை எத்தகைய பணிகளுக்கு பயன்படுத்தலாம் என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1404/ '16

கௌரவ பந்துல குணவர்தன,— வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2016 ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்டத்தின் 175 ஆம் இலக்க முன்மொழிவின் படி, யானை மனித மோதலுக்கு இலக்குகளுடனான ஒரு தீர்வை வழங்குவதற்காக 3 வருடங்களில் பயன்படுத்தப்படுவதற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 4000 மில்லியன் நிதி ஏற்பாட்டில் 2016 ஆம் ஆண்டினுள் பயன்படுத்தப்பட்ட நிதித் தொகை மற்றும் அவ்வாறு செலவு செய்யப்பட்ட நிதியின் விளைதிறன் யாது என்பதை இச்சபைக்கு அறிவிப்பாரா;

(ஆ) (i) குறிப்பிட்ட வரவு செலவுத்திட்ட முன்மொழிவை செயற்படுத்தும் பொறுப்பை ஏற்றுள்ள அமைச்சு அல்லது நிறுவனம் யாது;

(ii) 1977 தொடக்கம் இன்று வரை யானை மனித மோதல் காரணமாக அறிக்கையிடப்பட்டுள்ள மரணங்களின் எண்ணிக்கை மற்றும் சொத்துச் சேதங்கள் ஒவ்வொரு வருடத்தின்படி யாவை;

(iii) மேற்படி ஒவ்வொரு வருடத்திலும் யானை மனித மோதல் காரணமாக மரணமடைந்த தரப்பினருக்கு அரசாங்கத்தினால் இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டதா;

(iv) ஆமெனில், அவ்விழப்பீட்டுத் தொகை ஒவ்வொரு வருடத்தின்படி யாது;

(v) குறிப்பிட்ட வரவு செலவுத்திட்ட முன்மொழிவில் குறிப்பிடப்பட்டுள்ள யானை-மனித மோதலுக்கு வழங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள இலக்குகளுடனான தீர்வைப் பற்றி விளக்கமளிப்பாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1477/ '16

கௌரவ சமிந்த விஜேசிறி,— நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சுக்குச் சொந்தமான திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் மற்றும் நியதிச் சட்ட நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(ii) 2015 இல் தற்போதைய நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர் இந்த ஒவ்வொரு நிறுவனத்திற்காகவும் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ள பணியாளர் எண்ணிக்கை தனித்தனியாக யாது என்பதையும்;

(iii) அவ்வாறு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட ஆட்களின் பெயர்கள், முகவரிகள், கல்வித் தகைமைகள் மற்றும் ஆட்சேர்ப்புக்குரிய பதவிகள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி பணியாளர்களை ஆட்சேர்ப்பு செய்ய பின்பற்றப்பட்ட முறையியல் யாது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1503/ '17

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் சிறுவர் சனத்தொகையில் போசாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ள சிறுவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி எண்ணிக்கையை தீர்மானிக்கின்ற முறையியல் யாதென்பதையும்;

(iii) இலங்கையில் போசாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ள சிறுவர்களின் எண்ணிக்கை சிறுவர் சனத்தொகையில் எத்தனை சதவீதம் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி அ (i) இல் குறிப்பிட்டுள்ள சிறுவர்களின் எண்ணிக்கை, சமூகத்தின் ஒவ்வொரு வருமான மட்டங்கள் வாரியாக தனித்தனியாக யாதென்பதையும்;

(ii) இலகுவாகவே நோய்களுக்கு உள்ளாவதால் மரணிப்பதாக அறியவந்துள்ள போசாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ள சிறுவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1679/ '17

கௌரவ செயிட் அலி ஸாஹிர் மௌலானா,— சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மட்டக்களப்பு வைத்தியசாலையில் உள்ள வாட்டுகளின் பெயர்கள் மற்றும் எண்ணிக்கையையும்;

(ii) ஒவ்வொரு வாட்டிலும் உள்ள படுக்கைகளின் எண்ணிக்கை மற்றும் தற்போது அனுமதிக்கப்பட்டுள்ள நோயாளிகளின் எண்ணிக்கையையும்;

(iii) அனைத்து வைத்திய நிபுணர்களின் பெயர்களையும் அவர்களின் மருத்துவத் துறைகளையும்;

(iv) இவ் வைத்திய நிபுணர்கள் பொறுப்பாக உள்ள வாட்டுகளின் விபரங்களையும்

அவர் இச்சபைக்கு தெரிவிப்பாரா?

(ஆ) (i) வைத்திய நிபுணர்களின் பொறுப்பில் வழங்குவதற்கு வாட்டுகள் தட்டுப்பாடாக உள்ளன என்பதையும்;

(ii) இடவசதி மற்றும் படுக்கை வசதி இல்லாத காரணத்தினால் சாதாரண நோயாளிகளும், தீவிர மருத்துவ சிகிச்சை தேவைப்படும் பாரதூரமான நோயுடன் கூடிய நோயாளிகளும் சில வாட்டுகளில் தரைகளிலும் வராந்தாக்களிலும் தங்கியுள்ளதென்பதையும்;

(iii) மேலதிக வாட்டுகளின் நிர்மாணத்திற்காக வளாகத்தில் காணி கிடைக்கக் கூடியதாக உள்ளது என்பதையும்;

(iv) கிழக்கு பல்கலைக்கழக மருத்துவ மாணவர்களுக்கான ஒரு போதனா வைத்தியசாலையாக இது உள்ளது என்பதையும்

அவர் அறிவாரா?

(இ) (i) அவர் அதற்கு முன்னுரிமை அளித்து, அவசரமாகத் தேவைப்படும் வாட்டுகளின் நிர்மாணத்திற்கான நிதி ஒதுக்கீட்டை மேற்கொள்வரா என்பதையும்;

(ii) அவ்வாறாயின் எப்போது என்பதையும்

அவர் இச்சபைக்கு தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல் ஏன்?

1187/ '16

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மன்னார் மாவட்டத்தில்,

(i) 1983 ஆம் ஆண்டளவில் செய்கைபண்ணப்பட்ட மொத்த விவசாய நிலங்களின் அளவு யாது;

(ii) 1982 மற்றும் 1983 ஆம் ஆண்டுகளில் செய்கைபண்ணப்பட்ட விவசாய நிலங்களின் அளவு ஒவ்வொரு பயிருக்கிணங்கவும் வெவ்வேறாக எவ்வளவு;

(iii) 1983 ஆம் ஆண்டின் பின்னர் 2009 ஆம் ஆண்டில் யுத்தநிலைமை முற்றுப்பெறும்வரை செய்கைபண்ணப்பட்ட மொத்த நிலங்களின் அளவு ஒவ்வோராண்டுக்கிணங்கவும் வெவ்வேறாக எவ்வளவு;

(iv) யுத்தநிலைமை முற்றுப்பெற்ற பின்னர் இற்றைவரை செய்கைபண்ணப்பட்ட விவசாய நிலங்களின் அளவு ஒவ்வோராண்டுக்கிணங்கவும் வெவ்வேறாக எவ்வளவு;

(v) மேற்படி அனைத்தினதும் முழுமையான அறிக்கையொன்றை சமர்ப்பிப்பாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1335/ '16

கௌரவ புத்திக பத்திரண,— சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் தென் மாகாணத்தில் அறியக்கிடைத்த சிறு நீரக நோயாளிகளின் எண்ணிக்கை யாது;

(ii) அதன்படி, தென் மாகாணத்தில் ஆகக்கூடிய சிறு நீரக நோயாளிகள் அறியக்கிடைக்கும் மாவட்டம் யாது;

(iii) தென் மாகாணத்தில் சிறு நீரக நோய்க்கு ஏதுவாயுள்ள பிரதானமான காரணங்கள் யாவை;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி சிறு நீரக நோயாளிகளுக்கு அரசாங்கம் உதவி வழங்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளதா;

(ii) ஆமெனில், அவ்வாறு வழங்கப்பட்டுள்ள உதவிகள் யாவை;

(iii) தென் மாகாணத்தில் சிறு நீரக நோய் நிவாரணத்திற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா;

(iv) ஆமெனில், அந்நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1406/ '16

கௌரவ பந்துல குணவர்தன,— உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுதிட்டத்தின் 185 ஆம் இலக்க பிரேரணைக்கு அமைவாக, இலவச Wi-Fi வசதிகள் வழங்கப்பட்டுள்ள அரச பல்கலைக்கழகங்கள் மற்றும் அப்பல்கலைக்கழகங்களின் மாணவர்கள் இந்த வசதியினை அனுபவிக்க ஆரம்பித்த திகதிகள் வெவ்வேறாக யாவையென்பதையும்;

(ii) அரச பல்கலைக்கழக முறைமையினுள் மேற்படி டிஜிட்டல்மயப்படுத்தல் வசதிகளை வழங்குவதற்காக அரசாங்கத்தினால் உறப்பட்ட மொத்த செலவு யாதென்பதையும்;

(iii) மேற்படி செலவு எந்த அமைச்சினால் அல்லது நிறுவனத்தினால் செலவினமாக ஏற்கப்பட்டுள்ளதென்பதையும்;

(iv) அரச பல்கலைக்கழக முறைமையினுள் கல்வி கற்கும் அனைத்து மாணவர்களுக்கும் மடிக்கணனி வழங்குதல் சம்பந்தமாக அரசாங்கத்திற்கு திட்டவட்டமான வேலைத்திட்டமொன்று உள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், அந்த வேலைத்திட்டம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1505 / ‘16

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) 2016 ஆம் ஆண்டில்,

(i) மூலதன செலவிற்காக ஒதுக்கப்பட்ட நிதியில் ஆகக் கூடுதலான சதவீதத்தை பயன்படுத்தியுள்ள 05 அமைச்சுக்கள் யாவையென்பதையும்;

(ii) மூலதன செலவிற்காக ஒதுக்கப்பட்ட நிதியில் ஆகக் குறைந்த சதவீதத்தை பயன்படுத்தியுள்ள 05 அமைச்சுக்கள் யாவையென்பதையும்;

(iii) மீண்டுவரும் செலவிற்காக ஒதுக்கப்பட்ட நிதியில் ஆகக் கூடுதலான சதவீதத்தை பயன்படுத்தியுள்ள 05 அமைச்சுக்கள் யாவையென்பதையும்;

(iv) மீண்டுவரும் செலவிற்காக ஒதுக்கப்பட்ட நிதியில் ஆகக் குறைந்த சதவீதத்தை பயன்படுத்தியுள்ள 05 அமைச்சுக்கள் யாவையென்பதையும்;

(v) ஒதுக்கப்பட்ட நிதியில் ஆகக் கூடிய சதவீதத்தை பயன்படுத்தியுள்ள 05 அமைச்சுக்கள் யாவையென்பதையும்;

(vi) ஒதுக்கப்பட்ட நிதியில் ஆகக் குறைந்த சதவீதத்தை பயன்படுத்தியுள்ள 05 அமைச்சுக்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1731/ ’17

கௌரவ செயிட் அலி ஸாஹிர் மௌலானா,— கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) 1980 ஆம் ஆண்டில் மட்டக்களப்பு கடல் மணல் படுக்கைக்கு அண்மையில் மண் அகழ்தல் கருத்திட்டமொன்று இடம்பெற்றது என்பதையும்;

(ii) பயங்கரவாதச் செயற்பாடுகளின் நிமித்தமாக அக்கருத்திட்டம் அரைவாசியில் நிறுத்தப்பட்டது என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) கடலையும் வாவியையும் இணைக்கும் வாய் வருடாந்தம் மூடப்படாதிருத்தல்;

(ii) வருடம் பூராவும் வாவியில் மீன் பிடிக்கும் மீனவர்கள் மீன்பிடி நன்மையைப் பெற்றுக்கொள்ளல்;

(iii) ஆழ்நீர் மீன் பிடிக்கும் படகுகளும் இழுவைப படகுகளும் நங்கூரமிடுவதற்கு இலகுவாக வாவிக்குள் வரக்கூடியதாக இருத்தல்;

(iv) வெள்ள நீர் விரைவாக கடலுக்குள் செல்வதால் வெள்ளத்தின் பொழுது நெல் வயல்கள் சேதமடையாதிருத்தல்;

(v) வெள்ள நீர் இலகுவாக கடலுக்குள் செல்லுதல் அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட வேண்டிய வெள்ள நிவாரண முயற்சிகளைக் குறைத்தல்;

என்பன இக்கருத்திட்டத்தின் மூலம் கிடைக்கும் நன்மைகள் என்பதை அவர் அறிவாரா?

(இ) (i) இக்கருத்திட்டத்தை மீள ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அது எப்போது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல் ஏன்?

1336/ '16

கௌரவ புத்திக பத்திரண,— சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசாங்க வைத்தியசாலைகளுக்கு ஆண்டொன்றுக்கு தேவையான இருதய நாளங்களின் தடையை நீக்குவதற்கு பயன்படுத்தப்படும் "ஸ்டென்ட்ஸ்" களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) இதற்காக செலவிடப்படும் பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iii) எதிர்காலத்தில் தட்டுப்பாடின்றி மேற்படி "ஸ்டென்ட்ஸ்" களை நோயாளிகளுக்கு பெற்றுக்கொடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iv) ஆமெனின், அந்நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) இருதய நோயாளர்களுக்கு தேவையான வேறு ஔடத வகைகள் மற்றும் உபகரணங்களை அரசாங்கத்தினால் இலவசமாக பெற்றுக்கொடுப்பதற்கு எதிர்ப்பார்க்கப்படுகின்றதா என்பதையும்;

(ii) ஆமெனின், அவை யாவையென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ இன்றேல், ஏன்?

---

## 2017 யூலை 07, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1069/ '16

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) உத்தேசிக்கப்பட்டுள்ள குருநாகல் – தம்புளை புகையிரத வீதிக்கான சாத்தியவள கற்கையை மேற்கொள்ளல் சர்வதேச போட்டி ரீதியிலான விலைமனுக் கோரலின்றி சீனாக் கம்பனியொன்றுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) இன்றேல், ஒப்படைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்,

(iii) மேற்படி சாத்தியவள கற்கையை மொறட்டுவை பல்கலைக்கழகத்திற்கு அல்லது வேறொரு உள்நாட்டு நிறுவனத்திற்கு ஒப்படைக்காமைக்கான காரணம் யாதென்பதையும்,

(iv) இதன் பொருட்டு சர்வதேச போட்டி ரீதியிலான விலைமனுக் கோரல் மேற்கொள்ளப்படாமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1155/ '16

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சுக்கு CAQ - 1043 மற்றும் CAQ - 1047 ஆகிய இலக்கங்களைக் கொண்ட வாகனங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளனவா;

(ii) ஆமெனில், இவ்வாகனங்கள் கொள்வனவு செய்யப்பட்ட திகதிகள் யாவை;

(iii) ஒவ்வொரு வாகனமும் கொள்வனவு செய்யப்பட்ட விலை யாது;

(iv) இதற்கென கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டதா;

(v) ஆமெனில், அத் திகதி யாது;

(vi) கேள்விப் பத்திரங்களை முன்வைத்த நிறுவனங்கள் மற்றும் அவர்கள் முன்வைத்த விலை மனுக்கள் யாவை;

(vii) இவ்வாகனங்களின் மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள ஆரம்ப உரிமையாளர்கள் யாவர் ;

(viii) இவர்களின் முகவரிகள் யாவை;

(ix) சுங்க அறிக்கைகளின் படி இவ்வாகனங்கள் இறக்குமதியின்போது CIF பெறுமதி மற்றும் செலுத்தப்பட்ட பணத் தொகை யாது;

(x) இவ்வாகனங்களுக்கு கிடைத்த வரிச் சலுகை எவ்வளவு;

என்பதை அவர் அறிவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1188/'16

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1983 ஆம் ஆண்டளவில் மட்டக்களப்பு மாவட்டத்தில் இலங்கை மின்சார சபையினால் மின்சாரம் வழங்கப்பட்டுள்ள வீடுகளின் மொத்த எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) தற்போதைக்கு மின்சாரம் வழங்கப்பட்டுள்ள வீடுகளின் மொத்த எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) 1984 முதல் 2009 ஆம் ஆண்டு வரை மின்சாரம் வழங்குவதற்காக ஒதுக்கப்பட்டுள்ள பணத்தொகை ஆண்டு வாரியாக எவ்வளவென்பதையும்;

(iv) 2009 ஆம் ஆண்டில் யுத்த நிலவரம் முடிவடைந்த பின்னர் 2015 ஆம் ஆண்டு வரை மின்சாரம் வழங்கப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை ஆண்டு வாரியாக எவ்வளவென்பதையும்;

(v) மேற்படி (iv) இல் குறிப்பிடப்பட்டுள்ள காலகட்டத்தில் மின்சாரம் வழங்குவதற்காக ஒதுக்கப்பட்டுள்ள பணத்தொகை ஆண்டு வாரியாக எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(அ) இன்றேல், ஏன்?

1294/ ’16

கௌரவ டலஸ் அழகப்பெரும,— காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) சட்ட ரீதியிலான உரிமையின்றி மாத்தறை மாவட்டத்தில் இற்றைவரை அரச காணிகளில் வசிக்கும் அல்லது பயிர் செய்கை மேற்கொள்ளும் ஆட்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அந்த எண்ணிக்கை ஒவ்வொரு பிரதேச செயலாளர் பரிவுக்கும் ஏற்ப வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) மேலே (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஆட்களின் எண்ணிக்கையில் எத்தனைபேருக்கு காணி உறுதிகள் அல்லது உரிமப் பத்திரங்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) மேலே (iii) இல் குறிப்பிடப்பட்டுள்ள எண்ணிக்கை ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவுக்கும் ஏற்ப வெவ்வேறாக யாதென்பதையும்;

(v) 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் மாத்தறை மாவட்டத்தில் அரச காணிகளுக்கு வழங்கப்பட்டுள்ள உறுதிகள் அல்லது உரிமப்பத்திரங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(vi) மேலே (v) இல் குறிப்பிடப்பட்டுள்ள எண்ணிக்கை ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவுக்கும் ஏற்ப வெவ்வேறாக யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1337/ ’16

கௌரவ புத்திக பத்திரண,— உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 ஆம் ஆண்டில் இஸட் புள்ளிகள் ஒவ்வொரு பல்கலைக்கழகத்துக்கும் ஏற்புடையதாக வெளியிடப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) இதன் காரணத்தினால் சில மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதியை இழந்துள்ளனர் என்பதையும்;

(iii) இந்த முறையியல் காரணமாக இவர்களுக்கு பாரிய அநீதி ஏற்பட்டுள்ளது என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) அநீதிக்குள்ளான மாணவர்களை பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா;

(ii) ஆமெனில், அந்த முறையியல் யாது;

(iii) அது செயற்படுத்தப்படும் திகதி யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1408/'16

கௌரவ பந்துல குணவர்தன,— ஆரம்பக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவு திட்டத்தின் 182 ஆம் இலக்க பிரேரணைக்கமைவாக, ஆரம்பக் கைத்தொழில் பேரவையொன்று (Primary Industry Council) தாபிக்கப்பட்டதா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்தேதி மற்றும் இடம் யாதென்பதையும்;

(iii) மேற்படி வரவுசெலவுதிட்டப் பிரேரணையிலுள்ள ஆரம்பக் கைத்தொழில் பேரவையொன்றை தாபிப்பதன் நோக்கம் மற்றும் அதற்கான வேலைத்திட்டத்தைப் பற்றி சுருக்கமாக தெளிபடுத்துவாரா என்பதையும்;

(iv) இந்த பேரவையுடன் தொடர்புடைய நிபுணர்களின் பெயர் பட்டியலை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(v) மேற்படி பிரேரணையில் குறிப்பிடப்படுகின்ற இலங்கையில் தற்போது இயங்கும் நிலையிலுள்ள ஆரம்பக் கைத்தொழில்கள் பற்றிய பட்டியலொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(vi) 2009 இல் யுத்தம் முடிவடைந்த பின்னர் வடக்கு, கிழக்கு உள்ளிட்ட இலங்கையில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட ஆரம்பக் கைத்தொழில்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1504/ '17

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— கமத்தெழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 ஆம் ஆண்டின் முற்பகுதியிலும் 2017 ஆம் ஆண்டில் இற்றைவரையிலும் சந்தையில் நெற் செய்கைக்காகவும் வேறு பெருந்தோட்டச் செய்கைக்காகவும் பயன்படுத்துகின்ற பல்வேறு உர வகைகளின் விலைகள் தனித்தனியாக யாவையென்பதையும்;

(ii) 2016 ஆம் ஆண்டின் முற்பகுதியில் காணப்பட்ட உரத்தின் விலையுடன் ஒப்பிடுகையில், தற்போது உரத்தின் விலை அதிகரித்துள்ளதென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iii) 2016 ஆம் ஆண்டு ஆரம்பத்தில் சந்தையில் ரூபா 1300/= ஆக இருந்த 50 கிலோ கிறாம் உரப் பையொன்றின் விலை தற்போது ரூபா 2900/= வரை அதிகரித்துள்ளதா என்பதையும்;

(iv) உரத்தின் விலையை கட்டுப்படுத்தாதுவிடின் அல்லது சந்தை விலைக்கேற்ப உர மானியம் அதிகரிக்கப்படாவிடின், பெருந்தோட்டச் செய்கை உள்ளிட்ட கமத்தொழிலை சார்ந்து வாழ்கின்ற மக்களின் வாழ்க்கை பாரிய வீழ்ச்சிக்கு உள்ளாகுமென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;l

(v) ஆமெனில், அதற்காக முன்மொழியப்படும் தீர்வுகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1542/ '17

கௌரவ சமிந்த விஜேசிறி,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பண்டாரவளை உள்ளிட்ட விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடும் பதுளை மாவட்ட மக்களுக்கு, உமா ஓயா அபிவிருத்திக் கருத்திட்டம் பாரிய பாதிப்பை ஏற்படுத்தியுள்ளமையை ஏற்றுக்கொள்கிறாரா;

(ii) மேற்படி கருத்திட்டத்தின் காரணமாக பயிர்ச்செய்கைச் சேதம் ஏற்பட்டுள்ள மக்களுக்கு நட்டஈடு வழங்குவதற்கு அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டுள்ளதா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1734/ '17

கௌரவ செயிட் அலி ஸாஹிர் மௌலானா,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஆசிரியர் கலாசாலையிலிருந்து இறுதிப் பரீட்சையை நடத்தாமல் வன்னி மாவட்டத்திற்கு நியமிக்கப்பட்ட 41 பயிற்சி ஆசிரியர்கள் தொடர்பாக 2016.12.02 ஆம் திகதி வினாவொன்று எழுப்பப்பட்டதையும்;

(ii) இராஜாங்க அமைச்சர் அவரது பதிலில் அவசியமான நடவடிக்கையை மேற்கொண்டு மீண்டும் பதிலளிப்பதாக உறுதியளித்திருந்த போதிலும் அவ்விடயம் இற்றைவரை சரிசெய்யப்படாதுள்ளதென்பதையும்;

(iii) பயிற்சியின் பின் உடனடுத்து அமைச்சு இறுதிப் பரீட்சையை நடாத்தாமையினால் இந்த ஆசிரியர்கள் இறுதிப் பரீட்சைக்குத் தோற்ற முடியவில்லை என்பதையும்;

(iv) தங்களிலும் பார்க்க கனிஷ்ட பிரிவினருடன் இறுதிப் பரீட்சைக்குத் தோற்றிய இந்த ஆசிரியர்களின் நியமனங்கள் பிறிதொரு செயற்படும் திகதி கொடுக்கப்பட்டிருப்பின் அது அடிப்படை உரிமை மீறலாகும் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) அந்த 41 ஆசிரியர்களின் நியமனங்களுக்கும் அதே செயற்படும் திகதி வழங்கப்படுமா என்பதையும்;

(ii) பயிற்றப்பட்ட ஆசிரியர்களாவதற்கு முன் ஆசிரியர் கலாசாலைகளில் பயிற்சி பெற்றுக்கொண்டிருக்கின்ற வேளையில் "பயிலுனர் ஆசிரியர்" (Teacher Trainee) எனும் பதத்தை உபயோகிப்பது சரியன்று என்பதையும்;

அவர் இச்சபைக்கு தெரிவிப்பாரா?

(இ) இன்றேல் ஏன்?

1189/'16

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1983 ஆம் ஆண்டளவில் அம்பாறை மாவட்டத்தில் இலங்கை மின்சார சபையினால் மின்சாரம் வழங்கப்பட்டுள்ள வீடுகளின் மொத்த எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) தற்போதைக்கு மின்சாரம் வழங்கப்பட்டுள்ள வீடுகளின் மொத்த எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) 1984 முதல் 2009 ஆம் ஆண்டு வரை மின்சாரம் வழங்குவதற்காக ஒதுக்கப்பட்டுள்ள பணத்தொகை ஆண்டு வாரியாக எவ்வளவென்பதையும்;

(iv) 2009 ஆம் ஆண்டில் யுத்த நிலவரம் முடிவடைந்த பின்னர் 2015 ஆம் ஆண்டு வரை மின்சாரம் வழங்கப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை ஆண்டு வாரியாக எவ்வளவென்பதையும்;

(v) மேற்படி (iv) இல் குறிப்பிடப்பட்டுள்ள காலகட்டத்தில் மின்சாரம் வழங்குவதற்காக ஒதுக்கப்பட்டுள்ள பணத்தொகை ஆண்டு வாரியாக எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(அ) இன்றேல், ஏன்?

1352/ '16

கௌரவ புத்திக பத்திரண,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) தென் கொரியாவில் தொழில்வாய்ப்புகளுக்காக செல்கின்ற இலங்கையின் இளைஞர் யுவதிகள் பெருந்தொகையான வெளிநாட்டு செலாவணியை இந்நாட்டுக்கு கொண்டுவருகின்றனர் என்பதையும்;

(ii) இவர்கள் இப்பணத்தை உரிய முறையில் முகாமைத்துவம் செய்து முதலீடு செய்வதில்லை என்பதையும்;

(iii) எனவே இந்நாட்டுக்கு வந்து குறுகிய காலத்தில் ஈட்டிய பணம் முடிவடைவதனால் நிர்க்கதியான நிலைக்கு ஆளாகின்றனர் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) நிதி முகாமைத்துவம் மற்றும் முதலீடு தொடர்பாக இவர்களுக்கு விழிப்புணர்வூட்டுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதா;

(ii) ஆமெனில், அது எவ்வாறு;

(iii) இவர்கள் இந்நாட்டுக்கு கொண்டுவரும் பணத்ததை முதலீடு செய்வதற்குத் தேவையான வசதிகளை உருவாக்க நடவடிக்கை மேற்கொள்வாரா ;

(iv) ஆமெனில், அது எவ்வாறு;

(v) குறிப்பிட்ட பிரிவினர் தொடர்பாக பின்னாய்வு செய்வதற்கான பொறிமுறையொன்று அரசாங்கத்தினால் ஏற்படுத்தப்படுமா;

(vi) ஆமெனில், அது எவ்வாறு;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1409/'16

கௌரவ பந்துல குணவர்தன,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட பிரேரணை 181 இற்கேற்ப தங்கத்தை இறக்குமதி செய்வதற்காக 50 உரிமப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்தகைய உரிமப்பத்திரங்களை பெற்றுக்கொண்டவர்களின் பெயர்கள், முகவரிகள் மற்றும் அவர்களினால் செலுத்தப்பட்ட உரிமப்பத்திரக் கட்டணங்கள் பற்றிய விபரங்கள் அடங்கிய அறிக்கையொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iii) 1977 ஆம் ஆண்டு முதல் இற்றைவரை உலக சந்தையில் தங்கத்தின் விலையிலான போக்குகளைப் பற்றிய அறிக்கையொன்றை சமர்ப்பிப்பாரா என்பைதையும்;

(iv) வரி இன்றி இலங்கைக்கு தங்கத்தை இறக்குமதி செய்கின்ற ஆட்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(v) இலங்கை தங்கத்தை இறக்குமதி செய்யும் பிரதான வழங்குனர்கள் மற்றும் நாடுகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1508 / '17

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016.12.31 ஆம் திகதி உள்ளவாறு மொத்த பங்கு விலைச் சுட்டெண்ணின் பெறுமதி யாதென்பதையும்;

(ii) 2014.12.31 மற்றும் 2015.12.31 ஆம் திகதிக்கு ஒப்பீட்டளவில், 2016.12.31 ஆம் திகதிக்கு மொத்த பங்கு விலைச் சுட்டெண்ணின் பெறுமதி எத்தனை சதவீதத்தில் மாற்றமடைந்துள்ளதென்பதையும்;

(iii) 2016 ஆம் ஆண்டில் தேறிய வெளிநாட்டு கொள்வனவுகளின் பெறுமதி எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1190/'16

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1983 ஆம் ஆண்டளவில் திருகோணமலை மாவட்டத்தில் இலங்கை மின்சார சபையினால் மின்சாரம் வழங்கப்பட்டுள்ள வீடுகளின் மொத்த எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) தற்போதைக்கு மின்சாரம் வழங்கப்பட்டுள்ள வீடுகளின் மொத்த எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) 1984 முதல் 2009 ஆம் ஆண்டு வரை மின்சாரம் வழங்குவதற்காக ஒதுக்கப்பட்டுள்ள பணத்தொகை ஆண்டு வாரியாக எவ்வளவென்பதையும்;

(iv) 2009 ஆம் ஆண்டில் யுத்த நிலவரம் முடிவடைந்த பின்னர் 2015 ஆம் ஆண்டு வரை மின்சாரம் வழங்கப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை ஆண்டு வாரியாக எவ்வளவென்பதையும்;

(v) மேற்படி (iv) இல் குறிப்பிடப்பட்டுள்ள காலகட்டத்தில் மின்சாரம் வழங்குவதற்காக ஒதுக்கப்பட்டுள்ள பணத்தொகை ஆண்டு வாரியாக எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(அ) இன்றேல், ஏன்?

1353/'16

கௌரவ புத்திக பத்திரண,— உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) கடவத்த – கண்டி அதிவேக வீதியின் நீளம் எவ்வளவு;

(ii) இதற்கு செலவாகும் நிதித் தொகை எவ்வளவு;

(iii) நிர்மாணப் பணிகளை மேற்கொள்ளும் கம்பனி யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) குறிப்பிட்ட வீதியை நிர்மாணிக்கையில் ஏற்புடைய பிரதேசங்களின் சுற்றாடல் முறைமைகளுக்கு ஏற்படக்கூடிய சேதம் தொடர்பில் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், மேற்படி சேதத்தை குறைப்பதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

(iii) வீதியின் வேலைகளை பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ள திகதி யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?